## பிலிசறு செயற்திட்டத்தின்

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 4 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி செயற்திட்டத்தின் நிதி நிலமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகையினை சகல பொருண்மையான விடயங்களிலும் நியாயமானதாக காட்டத்தக்க வகையில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டோலைகளுடன் கூடிய ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஏனைய தொடர்புடைய நிதிக்கூற்றுக்கள் திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தன என்றும், வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஐந்து நிர்மாண ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட ரூபா 6,874,089 ஆன பிடித்து வைத்தல் காசுத் தொகை கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ii) 09 சந்தர்ப்பங்களுடன் தொடர்புபட்ட ரூபா 1,180,898 ஆன அட்டுறு செலவினம் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(iii) 4 சந்தர்ப்பங்களில் வேலைதொடக்க முற்பணமாக வழங்கப்பட்டிருந்த முற்பணங்களிலிருந்து 2010 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய ரூபா 20,909,285 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(iv) களுத்துரை கொம்போஸ்ட் பிரிவினைத் தாபிப்பதற்காக 20 ஒப்பந்தகாரர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த மீளளிக்கப்பட வேண்டிய கேள்வி வைப்புப்பணம் ரூபா 200,000 இனை மீளளிக்கையில் மீளாய்வாண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(v) 2008 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு இது வரை முடிவுறுத்தப்படாத 07 செயற்திட்டங்களிற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 217,732,949 கிரயத்தினை

முடிவுறா வேலைகளாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அந்தந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் குறித்த ஆண்டுகளில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.
கோவைகளின் படி 17,000 கொம்போஸ்ட் தொட்டிகள் கிடைத்திருந்ததுடன் இருப்புப் புத்தகத்தின் படி விநியோகிக்கப்பட்டவை 7,737 ஆகும். அதன் படி இறுதி இருப்பு 9,263 தொட்டிகள் ஆன போதிலும், 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் இறுதி இருப்பாக ரூபா 49,284 பெறுமதியான 23 தொட்டிகள் காட்டப்பட்டிருந்தன. அதன் படி ரூபா 19,848,756 பெறுமதியான 9,240 தொட்டிகள் இருப்புப் புத்தகங்களிலிருந்து விடுபட்டிருந்தன.

## 2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கு எதிரேயும் காட்டப்பட்டுள்ள உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | தொகை | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| முற்பணச்செலுத்தகை – உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு | 44,927,866 | திட்டம், மதிப்பீடு, விபரமான பட்டோலை |
| செயற்திட்டச் செலவினம் - உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு | 8,772,158 | செய்யப்பட்ட வேலைச் சான்றிதழ் |
| இறுதி இருப்பு | 200,173 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| செலுத்தப்பட வேண்டிய மீண்டெழும் மானியம் | 6,723,045 | பட்டோலைகள் |
| 40 இரும்பு தகடுகளைக் கொள்வனவு செய்தல் | 1,222,857 | மதிப்பீடு, பொருள் பெறுவனவுப் பத்திரம் |

| | | |
|---|---|---|
| 10% பிடி காசு | 6,874,089 | விபரமான பட்டோலை |
| வேலைதொடக்க முற்பணம் | 20,909,285 | வேலைதொடக்க முற்பண பதிவேடு |
| நாட்குறிப்புப் பதிவுகளினால் மேற்கொள்ளப்பட்ட சில்லறைப் பெறுவனவுகள் மற்றும் செலுத்துகைகள் | 61,821,009 | இல. 01 தொடக்கம் 198 வரையான நாட்குறிப்புப் பதிவுகள் |

## 2.4 சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயகக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கையேடு** | |
| (i) நி. பி. 371 | 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 650,000 முற்பணங்கள் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி. பி. 396(இ) | 06 மாதங்கள் காலங்கடந்த ரூபா 69,076 பெறுமதியான 25 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி. பி. 756 மற்றும் 757 | பௌதீக சொத்து மெய்மையாய்வொன்றை மேற்கொண்டு குறித்த அறிக்கையினை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (iv) நி. பி. 1646 | செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்கள் தொடர்பில் லொக் புத்தக குறிப்புகள், |

விபத்துக்கள் மீதான பதிவேடுகள், எரிபொருள் நுகர்ச்சி தொடர்பான அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுற்றறிக்கை ஏற்பாடுகள்**

| | |
|---|---|
| 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 (5:2) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் உரித்தற்ற செயற்திட்டப் பதவியணியின் 4 பிரதிப் பணிப்பாளர் பதவிகளிற்காக 2008 ஜுலை 28 ஆந் திகதிய 271/1538/08 ஆம் இலக்க பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தினால் குழுப் போக்குவரத்து வசதிகளிற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |

## 2.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

செயற்திட்ட அலுவலகத்தினை நடாத்திச் செல்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கட்டிட வாடகையாக வருடாந்தம் ரூபா 3.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் வாடகைக்குப் பெற்றிருந்த கட்டிடத்தில் வாகன நிறுத்தகத்தினை நிர்மாணிப்பதற்காக செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1.5 மில்லியன் செலவினத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

**நோக்கங்களை நிறைவேற்றாமை**

(i) வருடாந்த மதிப்பீடுகளின் படி முன்னுரிமை செயற்திட்டமான பிலிசறு உக்காத கழிவுகள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திற்காக கொழும்பு மாவட்டத்தின் ஹைலெவல் வீதிப் பிரதேசத்தில் கழிவு முகாமைத்துவ முறைமையொன்றை தாபித்தல் திறைசேரியின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும், நிலையான நிலைத்து நிற்கக்கூடிய உக்காத கழிவுகள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தினை உருவாக்கும் அந்நோக்கத்திற்காக 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்காக முறையே ரூபா 123, 265, 695 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2010 திசெம்பர் வரை இந் நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) உரியபடி உக்காத கழிவுகளை அப்புறப்படுத்தாத உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் நோக்கமொன்றான போதிலும், கொழும்பு புளூமெண்டால் மற்றும் நாவின்ன ஹைலெவல் வீதியில் இவ்வாறு முறையற்ற விதத்தில் கழிவுகளை அகற்றிமையால் சுற்றாடல் மாசடைதல் தொடர்பில் எவ்வித சட்டரீதியான நடவடிக்கைளும் எடுக்கப்பட்மைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 நிதியங்களின் குறைப் பாவனை

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவகத்தினால் (KOIKA) தொம்பேயில் கொம்போஸ்ட் ஆலையொன்றை நிர்மாணிப்பதற்காக 2010 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ரூபா 10,000,000 வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நிதியிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 223,511 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் படி குறித்த பணிக்காக பயன்படுத்தப்படாதிருந்த ரூபா 9,776,489 தொகை 2010 திசெம்பர் 31 இல் திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

## 2.8 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப்பயன்படுத்திய சொத்துக்கள்

பிலிசறு செயற்திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப அனுசரணையின் மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை அமைந்துள்ள வளவில் உயிர் வாயு பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்காக 2010 ஜுலை 05 ஆந் திகதி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டு குறித்த பணிக்காக ரூபா 1,082,879 செயற்திட்டத்தினால் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஜுலை 05 ஆந் திகதி வேலைதொடக்க முற்பணமாக உடன்படிக்கைப் பெறுமதியில் 30% அல்லது ரூபா 324,864 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கையின் 2.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஆய்ந்தறிதல் குழுவானது ஒவ்வொரு மாதமும் ஒன்றுகூடி செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் அடங்கிய அறிக்கையொன்றை செயற்திட்டப் பணிப்பாளரிற்கோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிற்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கும் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமாயினும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை திகதியிலிருந்து 14 மாதங்கள் கடந்தபின்னர் அதாவது 2011 செப்தம்பர் 09 ஆந் திகதி இம் முற்பணத்தொகை செயற்திட்டத்திற்கு மீளளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 2.9 செயற்திட்ட வாகனங்களின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்திற்குச் சொந்தமாக 6 வாகனங்கள் காணப்பட்டதுடன் 4 சாரதிகள் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டில் வாகன எரிபொருள், திருத்தம் மற்றும் சேவைகளிற்காக ரூபா 3,350,855 செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்கு முன்னைய வருடத்தின் செலவினம் ரூபா 2,868,589 ஆகும். அதன் படி மீளாய்வாண்டின் செலவினம் 16.81% இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) வாகனங்கள் செயற்தினாகவும் நாளாந்தத் தேவைகளிற்காகவும் பயன்படுத்தப் பட்டிருந்தன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறைமையொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன. வாகன ஓட்டக் குறிப்புகளில் மாதாந்த ஓட்டப் பொழிப்புகள் பூரணமற்றதாக காணப்பட்டதுடன் பயணம் செய்த உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்தாத சந்தர்ப்பங்கள், சாரதிகளின்றி ஓடிய சந்தர்ப்பங்கள் மற்றும் நாளாந்தம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிலிருந்து வாகனங்கள் பயணத்தை ஆரம்பிக்காது வேறு இடங்களிலிருந்து பயணத்தை ஆரம்பித்திருந்த சந்தர்ப்பங்களும் மைலோ மாணியின் இறுதி மற்றும் ஆரம்ப பதிவுகளில் வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

## 3. செயற்திட்டச் செயலாற்றல்

### (அ) நிதிசார் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் உள்ளபடியான செலவினங்களின் பரிசோதனையில் செயல்நடவடிக்கைத் திட்டமானது செயற்திட்டச் செயற்பாடுகளின் பொருட்டு பயனுள்ள கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் மீதான விபரங்கள் வருமாறு.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மொத்த நிதி ஏற்பாட்டுத் தொகை ரூபா 695 மில்லியனாகும். உள்ளபடியான செலவினம் ரூபா 410 மில்லியனாகும். அதன் படி குறைவாகப் பயன்படுத்திய தொகை ரூபா 285 மில்லியனான 41% ஆகும்.

(ii) மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுச் செலவின எல்லையினை மீறி முறையான அங்கீகாரமின்றி 04 செயற்திட்டச் செயற்பாடுகளிற்காக ரூபா 8.754 மில்லியன் செயற்திட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(iii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 12 செயற்பாடுகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 56,800 நிதி ஏற்பாட்டிலிருந்து எத்தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 05 நடவடிக்கைகளிற்காக மீளாய்வாண்டில் 10% இற்கும் குறைவான தொகையே செலவிடப்பட்டிருந்ததுடன் 50% இற்கும் குறைவாக செலவிடப்பட்டிருந்த செயற்பாடுகளின் எண்ணிக்கை 06 ஆகும்.

**(ஆ) பௌதீக செயலாற்றல்**

உக்காத கழிவுகளை முகாமைத்துவம் செய்வதே பிலிசறு செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். மேற்படி பணியினை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2008 – 2010 வரையான மூவாண்டுக் காலப்பகுதிக்காக பொதுத் திறைசேரியினால் ரூபா 5.6 மில்லியன் செலவின நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த மதிப்பீட்டின் படியான நிதி ஏற்பாட்டுத் தொகை மற்றும் உள்ளபடியான செலவினம் என்பன வருமாறு.

| | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| திரட்டு நிதியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகை | 107,553,359 | 877,080,000 | 695,000,000 |
| உள்ளபடியான தொகை | 107,553,359 | 252,743,886 | 410,194,602 |
| சதவீதமாக பயன்பாடு | 100% | 29% | 59% |

மேற்படி அட்டவணையினால் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் செய்யப்பட்ட செலவினத்தில் கொம்போஸ்ட் பிரிவினைத் நிர்மாணித்தல் மற்றும் நிலத்தினை நிரப்புவதற்காக ரூபா 164,081,106 உம் சிறிய அளவிலான உக்காத கழிவுகள் முகாமைத்துவச் செயற்திட்டங்களிற்காக நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளிற்கான ரூபா 33,666,023 உம் நிலப்பரப்பு நிரப்புதலை ஸ்தாபிப்பதற்காக பிலிசறு செயற்திட்டத்தின் நிதி உதவியின் கீழ் தேசிய உக்காத கழிவுகள் முகாமைத்துவ உதவி நிலையத்தினால் அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களிற்காக ரூபா 35,700,024 உம் வழங்கப்பட்டிருந்தன.

(ii) பிலிசறு செயற்திட்டத்தின் பிரதான நோக்கமான உக்காத கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக 2008 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை ரூபா 2,079,613,359 தொகையொன்று நிதி ஏற்பாடாக ஒதுக்கீடு செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன் உள்ளபடியாக ரூபா 770,491,847 செலவினத்தினை செய்து உக்காத கழிவுகள் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. மேற்படி செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோள்களான கொழும்பு நகர எல்லைப்பகுதியில் நாளாந்தம் ஒன்றுசேரும் 800 தொன் கழிவுகள் மற்றும் மஹரகம நகரசபை எல்லைப்பகுதியில் நாளாந்தம் ஒன்றுசேரும் 50 தொன் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக 2011 ஆம் ஆண்டு வரை தீர்வொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கொப்போஸ்ட் பிரிவினை நிர்மாணித்தல்**

**(i) கொலன்னாவ பொதுவில்கும்புர கொப்போஸ்ட் பிரிவு**

இப்பிரிவில் நாளாந்தம் 40 மெற்றிக் தொன் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல் நோக்கமாக இருந்தது. 2008 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான 03 ஆண்டுகளிற்காக ரூபா 156,170,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டு ரூபா 105,502,007 ஆன உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியின் மீது ரூபா 36,619,155 செலவிடப்பட்டிருந்தது. இந் நிர்மாணத்தினை 2010 ஜனவரி 22 இல் ஆரம்பித்து 09 மாத காலத்தில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. கொம்போஸ்ட் பிரிவினை பௌதீகப் பரிசோதனைக்கு உட்படுத்திய 2011 ஆகஸ்ட் 23 ஆந் திகதியளவில் வேலைகளைப் பூரணப்படுத்தி கையளிக்கப்பட்டிருக்கவில்லை. கழிவுகள்

முகாமைத்துவ செயற்திட்டத்திற்கு அத்தியாவசியத் தேவையொன்றான கேபல் இயந்திரம் 2011 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய பௌதீகப் பரிசோதனை வரை நிறுவப்படாதிருந்ததுடன் பாதுகாப்பு வேலியினை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 2009 திசெம்பர் 18 ஆந் திகதிய செயற்திட்டக் கையளிப்பு கடிதத்தின் 02 மற்றும் 03 ஆம் பிரிவுகளின் படி செயலாற்றல் பிணையொன்று வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அக் கழிவு மேட்டிலிருந்து உற்பத்தியாகும் பெருமளவிலான அசுத்த நீர் கொலன்னாவ கால்வாயில் சேர்ந்து ஓடுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கென பொருத்தமான வேலைத்திட்டமொன்று செயற்திட்டத்திடம் காணப்படவில்லை. நுளம்புகள் பெருக்கொடுக்கும் பாரிய பிரதேசத்திற்கு துர்நாற்றமும் தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

**(ii) வெலிகம நகர சபையின் உக்காத கழிவுகள் முகாமைத்துவத்திற்காக வதிவிடப் பயிற்சி நிலையமொன்றைத் தாபித்தல்**

இரண்டு நிர்மாணக் கட்டங்களைக் கொண்டதாகக் காணப்பட்டதுடன் I ஆம் கட்டத்திற்காக 2008 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடு ரூபா 1,446,800 ஆக காணப்பட்டதுடன் II ஆம் கட்டத்திற்கான மதிப்பீடு ரூபா 1,510,225 ஆகும். வதிவிடப் பயிற்சி நிலையமொன்றைத் திறந்து வைப்பதற்காக 2008 இல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் வெலிகம நகரசபையும் ஒன்றிணைந்து ரூபா 1,500,000 தொகைக்கு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தன. அதற்காக ஏற்பாட்டுத் தொகையில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளிற்காக ரூபா 1,366,264 செலவிடப்பட்டிருந்தது. II ஆம் கட்ட நிர்மாணப் பணிகளிற்காக எதிர்பார்க்கப்படும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய பகுதியளவில் பூரணப்படுத்தப்பட்ட பயிற்சி நிலையமொன்று பௌதீகப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டதுடன் கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளை மேற்கொள்ளாது மூன்று ஆண்டுகளாக பயன்பாடற்ற நிலையில் வைத்திருக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கங்களிற்கு முரணாக இது வரை நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்ட பகுதியில் வெலிகம நகர சபையினால் கால்நடை பண்ணையொன்று நடாத்திச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் கொம்போஸ்ட் உற்பத்திசெய்தல் தொடர்பான பயற்சி நெறிகள்

நடாத்தப்படுகையில் இந்நிலையத்தின் நிர்மாணத்தினைப் பூரணப்படுத்தி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாது பயிற்சி நெறிகளை நடாத்துவதற்காக செயற்திட்டத்தினால் ஹொட்டேல்களிற்காக ரூபா 254,049 மேலதிக செலவினம் செய்யப்பட்டிருந்தது.

**(iii) குளியாப்பிடிய நகர சபை கொப்போஸ்ட் பிரிவு**

நாளாந்தம் 08 மெற்றிக் தொன் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல் நோக்கமாக இருந்தது. 2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு ரூபா 38,292,000 ஆனதுடன் செலவினம் ரூபா 25,879,845 ஆக காணப்பட்டது. செயற்திட்டம் 2009 பெ்ரவரி 07 ஆந் திகதி திறந்துவைக்கப்பட்டிருந்தது. 2001 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய பௌதீகப் பரிசோதனையில் கொம்பொஸ்ட் உற்பத்தி இடம்பெற்று வந்திருந்ததுடன் கழிவுகளைத் தெரிவுசெய்வதற்காக இயந்திர உபகரணங்களைப் பயன்படுத்தாது 12 ஊழியர்களினால் செய்யப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டதுடன் இச் செயற்திட்டத்திற்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக பிலிசறு செயற்திட்டத்தினால் ரூபா 31,576,075 தொகையொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், பெற்றுக்கொள்ள வேண்டிய உபகரணங்கள் குறித்த விபரமொன்றோ அல்லது பெற்றுக்கொண்ட பொருட்கள் மீதான விபரமொன்றை செயற்திட்டத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கொம்போஸ்ட் உற்பத்தியின் பின்னர் வெளியேற்றப்படும் உக்காத கழிவுப் பொருட்கள் திறந்த வெளியொன்றில் குவித்து வைத்திருக்கப்பட்டிருந்ததுடன் அதற்குத் தீர்வொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(iv) பன்னல பிரதேச சபை உக்காத கழிவுகள் முகாமைத்துவ செயற்திட்டம்**

நாள்தோறும் 03 தொன் கூலங்களைப் பணன்படுத்தி மாதந்தோறும் 18 தொன் கொம்போஸ்டினை உற்பத்தி செய்தல் குறிக்கோலாக காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு ரூபா 4,061,130 ஆனதுடன் ரூபா 4,032,280 செலவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி தற்போதைய கொம்போஸ்ட் உற்பத்தி 0.6 தொன்னாகும். இது எதிர்பார்த்த மட்டமாகும் என செயற்திட்டத்தினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. கழிவாகும் உக்கிப்போகாத பொருட்கள் திறந்தவெளியில் குவிக்கப்பட்டிருந்தது. கழிவுப் பொருட்கள் தொடர்பில் எச்

செயற்திட்டத்தினாலும் தீர்வொன்று முன்வைக்கப்படாதிருந்தமை பௌதீகப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

**(v) மாத்தரை நகர சபை கொப்போஸ்ட் பிரிவு**

நாளாந்தம் 40 மெற்றிக் தொன் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல் நோக்கமாக இருந்தது. 2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு ரூபா 45,950,000 ஆனதுடன் செலவினம் ரூபா 26,286,562 ஆக காணப்பட்டது. இப் பிரிவு 3 ஏக்கர் நிலப்பரப்பில் தாபிக்கப்பட்டிருந்தது. இப் பிரிவிற்கு நாள்தோரும் ஏறத்தாழ 12 தொன் கூலங்கள் கிடைப்பது பௌதீகப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டதுடன் நாளாந்தம் கிடைக்கின்ற 40 தொன்கள் குப்பைகளிலிருந்து வெளியாகும் 6’ நீட்டம், 5’ அகலம் மற்றும் 8’ ஆழம் கொண்ட தொட்டியொன்று தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. கழிவுகளை அகற்றும் வசதிக்காக (Leachete Treatment Facility) 2009 ஆம் ஆண்டில் ரூபா 5,211,451 செலவிடப்பட்டிருந்தது. கொம்பொஸ்ட் உற்பத்தியிலிருந்து வெளியாகும் கழிவுகள் சேர்வதற்கு திட்டமிட்டு தயாரிக்கப்பட்டிருந்த தொட்டியானது வெளியாகும் கழிவுகளிற்குப் போதியதாக இல்லாதிருந்ததுடன் அத் தொட்டியிலிருந்து வெளியே கொட்டும் கழிவுகளிருந்து துர்நாற்றம் வீசும் நிலைமை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. வெளியே கொட்டும் கழிவுகளிற்கு அருகாமையில் இளையாண்களையும் காணமுடிந்தது. மேலும் அப்புறப்படுத்தப்படுகின்ற பிளாஸ்டிக்குகள் மற்றும் கொம்போஸ்ட் உற்பத்திக்கு எடுக்கப்படாத கழிவுகள் வேறாக குவித்து வைக்கப்பட்டிருந்தன.

**(vi) ஹிக்கடுவ மொனரோவியாவத்த கழிவுகள் முகாமைத்துவ செயற்திட்டம்**

50 தொன் குப்பைகளை முகாமைத்துவம் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எதிர்பார்த்த கொப்போஸ்ட் அளவு 07 தொன்னாகும். 2010 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடு ரூபா 35,100,000 ஆகவும் 2011 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தத்தின் பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 83,432,427 ஆகவும் காணப்பட்டது. நிர்மாண வேலைகளிற்காக ரூபா 1,653,277 மீளாய்வாண்டிலும் ரூபா 39,388,575

தொகை 2011 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரைக்கும் செலுத்தப்பட்டிருந்தது. 06 உள்ளூராட்சி மன்றங்களின் குப்பைகளை மீள்சுழற்சிப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. பிலிசறு செயற்திட்டத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் கம்பனி சமர்ப்பித்திருந்த விலைமனுவிற்கும் மிகக் குறைந்த விலை மனுவினை சமர்ப்பித்திருந்த தனியார் கம்பனியின் விலைமனுவிற்கும் இடையில் ரூபா 18,360,980 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தில் (ICTAD) பதிவுசெய்யப்பட்ட C2 மற்றும் C3 தரத்தில் அமைந்த 05 நிறுவனங்கள் குறைந்தபட்ச விலைமனுக்களை சமர்ப்பித்திருக்கையிலும் 07 ஆம் இடத்திலிருந்த C3 ஆம் தர கேள்விதாரரிற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. ஹிக்கடுவ கொம்பொஸ்ட் பிரிவினைத் தாபிக்கும் உடன்படிக்கையின் படி 2011 பெப்ரவரி 08 ஆந் திகதி நிர்மாண வேலைகள் தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தினை முடிவுறுத்தி 2011 செப்தம்பர் 09 ஆந் திகதி பிலிசறு செயற்திட்டத்திடம் ஒப்படைக்க வேண்டிய போதிலும், 2011 ஆகஸ்ட் 26 ஆந் திகதி செயற்திட்டம் மீதான பௌதீகப் பரிசோதனையில் நிர்மாண வேலைகள் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஆயினும், 2011 ஜனவரி 01 தொடக்கம் 2011 ஓகஸ்ட் 31 ஆந் திகதி வரை நிர்மாண வேலைகளிற்காக ஒப்பந்தக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 39,388,575 அல்லது ஒப்பந்தப் பெறுமதியில் 47% ஆகும். மதியுரைச் சேவை நிறுவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த தனியார் நிறுவனத்திற்கு 2010 ஆம் ஆண்டில் ரூபா 75,000,000 ஒப்பந்தப் பெறுமதியில் (ரூபா 75,000,000 x 3% x 80%) ரூபா 1,800,000 மதியுரைச் சேவைக்கட்டணம் தீமாணிக்கப்பட்டு அதில் ரூபா 1,338,750 செலுத்தப்பட்டிருக்கையில் 2011 ஆம் ஆண்டில் ஒப்பந்தப் பெறுமதியினை மீண்டும் ரூபா 83,432,427 ஆக மாற்றம் செய்தமை காரணமாக மதியுரைச் சேவைக்கட்டணமானது (ரூபா 83,432,427 x 3% x 80%) ரூபா 2,002,378 ஆக திருத்தியமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு மதியுரைச் சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிலத்திலுள்ள மண்ணின் தன்மை, நிர்மாணிப்பட்ட பக்கச்சுவர்களை மீளவும் உடைத்து அப்புறப்படுத்தல், நிர்மாணத்தினை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த காலம் போதாமை போன்ற காரணங்களைக் கருத்திற்கொள்கையில் உரிய மதியுரைச் சேவை வழங்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4. முகாமைத்துவ செயற்திறனின்மை

பிலிசறு செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் படி நாளாந்த குப்பைகளின் அளவினை அடிப்படையாகக் கொண்டு நிதி மதிப்பீடுகளைத் தயாரிக்கையில் பேரளவு செயற்திட்டங்களிற்கும் சிற்றளவு செயற்திட்டங்களிற்கும் என அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதி அளவுகளிற்கிடையே பெரியளவிலான முரண்கள் அவதானிக்கப்பட்டன.

| | செயற்திட்டம் | நாளாந்த குப்பைகளின் அளவு | உள்வாங்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் | அங்கீகரிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| (i) | மெதிரிகிரிய யுதகனாவ செயற்திட்டம் | 10 தொன் | 02 | 22,848,484 |
| (ii) | அநுராதபுரம் கிரீக்குலம செயற்திட்டம் | 40 தொன் | 04 | 77,322,024 |
| (iii) | கொலன்னாவ பொதுவில்கும்புர செயற்திட்டம் | 40 தொன் | 01 | 112,587,082 |
| (iv) | களுத்துரை பொஹொரவத்த செயற்திட்டம் | 38 தொன் | 04 | 72,912,453 |
| (v) | மாத்தறை மாநகர சபை | 40 தொன் | 01 | 45,950,000 |
| (vi) | குளியாபிடிய நகர சபை | 08 தொன் | 01 | 38,292,000 |
| (vii) | நாவலபிடிய மாநகர சபை | 08 தொன் | 01 | 28,650,000 |
| (viii) | பதுளை மாநகர சபை | 25 தொன் | 01 | 82,475,000 |
| (ix) | ஹிக்கடுவ மொனரோவியாவத்த செயற்திட்டம் | 50 தொன் | 06 | 93,444,318 |

| | | | | |
|---|---|---|---|---|
| (x) | குருணாகல் சுந்தராபொல செயற்திட்டம் | 38 தொன் | 02 | 48,000,000 |
| (xi) | வென்னப்புவ பிரதேச சபை | 08 தொன் | 01 | 21,500,000 |
| (xii) | தங்கல்ல நகர சபை | 08 தொன் | 01 | 23,500,000 |
| | | | ----------- | ------------------- |
| | | | 24 | 643,981,361 |
| | | | ===== | ====== |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அநுராதபுரம் கீரீக்குலம செயற்திட்டம், கொலன்னாவ பொதுவில்கும்புர செயற்திட்டம், மாத்தறை மாநகர சபை செயற்திட்டம் என்பவற்றின் நாளாந்தம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய குப்பைகளின் அளவு 40 தொன்களான போதிலும் அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை முறையே ரூபா 77,322,024, ரூபா 112,587,082 மற்றும் 45,950,000 ஆக காணப்பட்டன.

(ii) களுத்துறை பொஹொரவத்த செயற்திட்டம் மற்றும் குருணாகல சுந்தராபொல செயற்திட்டத்தினால் நாளாந்தம் 38 தொன் குப்பைகளை முகாமைத்துவம் செய்வதற்காக முறையே ரூபா 72,912,453 மற்றும் ரூபா 48,000,000 செலவிடப்பட்டிருந்தது.

(iii) ஹிக்கடுவ மொனரோவியாவத்த செயற்திட்டம் மற்றும் பதுளை மா நகர சபையின் முறையே நாளாந்த 50 மற்றும் 25 தொன் குப்பைகளை முகாமைத்துவம் செய்வதற்காக முறையே ரூபா 93,444,318 மற்றும் ரூபா 82,475,000 செலவிடப்பட்டிருந்தது.

## 5. கொம்பொஸ்ட் தொட்டிகளை கொள்வனவு செய்தல்

பிலிசறு செயற்திட்டத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 40,798,889 செலவில் 17,000 கொம்பொஸ்ட் தொட்டிகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. ரூபா 12,269,674 பெறுமதிக்குரிய 5726 தொட்டிகளிற்கு பொருள்பெறுவனவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீடு

(இ) முற்பணங்களைத் தீர்த்தல்

(ஈ) நாட்குறிப்புப் பதிவு

(உ) பதிவேடுகளின் பேணுகை

(ஊ) நிர்மாண ஒப்பந்தங்கள்

(எ) நிதிகளின் பயன்படுத்தல்

(ஏ) வாகனப் பாவனை

(ஒ) ஆளணி முகாமைத்துவம்